அழகுசாதன அன்பளிப்பு பொருள்களையும் கைக்கடிகாரங்களையும் வாங்குவதற்கு சிறந்த ஸ்தாபனம்
ஞானம் விற்பனைக் கூடம்
66, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

எவர்சில்வர் பிளாஸ்ரிக், அலுமினிய பொருள்களை வாங்குவதற்கு யாழ். நகரில் சிறந்த ஸ்தாபனம்!
ஞானம் விற்பனைக் கூடம்
6'9 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சுடர்10 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 08 திங்கட்கிழமை (22 - 05 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 176

# வல்லைவெளியில் சென்ற பஸ்மீது ஷெல் தாக்குதல்

## பதினொரு பயணிகள் காயம்

வடமராட்சி, மே 22

நேற்று மாலை 4 மணியளவில் வல்லை வெளியூடாகச் சென்று கொண்டிருந்த பயணிகள் பஸ் மீது வளலாய்ப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் நடத்திய ஷெல் தாக்குதலில் 11 பயணிகள் காயமடைந்தனர்.

பஸ்ஸின் முன்புறத்திலும் பஸ்ஸுக்கு அருகிலும் விழுந்து வெடித்த மூன்று ஷெல்களினால் பஸ்ஸின் ஒரு பகுதி எரிந்து சேதமுற்றது.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு வல்லை, உடுப்பிட்டி, மாலிசந்தி, பருத்தித்துறை ஊடாக தாளையடி செல்லவிருந்த பயணிகள் பஸ்ஸே படையினரின் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகியது.

வல்லை பிரதான வீதியிலிருந்து உடுப்பிட்டி நோக்கி பிரிந்து செல்லும் பாதையில் — வல்லை - தொண்டமானாறு — நாற்சந்தியில் —

(4ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் பாய்ந்து ஓடியிராவிட்டால் பெரும் உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கும்

### பஸ் மீதான ஷெல் தாக்குதலில் காயமுற்றவர் தகவல்

வடமராட்சி, மே 22

''வல்லைச் சந்தியைத் தாண்டி பஸ் சென்றுகொண்டிருந்தபோது பெரிய வெடிச் சத்தம் ஒன்று கேட்டது. அத்தோடு பஸ் நின்றுவிட்டது. பஸ் ரயரே வெடித்துவிட்டது என முதலில் நினைத்து பேசாமல் இருந்தோம். அப்போது ஒரு கந்தக வாடையுடன் கூடிய புகை பஸ்ஸைச் சூழ்ந்து கொண்டது. அந்த மணத்தை உணர்ந்ததும் பஸ் ஷெல் வீச்சுக்கு இலக்காகிவிட்டது என்பதைப் புரிந்து கொண்டோம்; அனைவரும் பஸ்ஸை விட்டுக் குதித்து ஓடத் தொடங்கினோம்''

— இவ்வாறு நேற்று ஷெல் வீச்சுக்கு இலக்கான பஸ்ஸில் பயணம் செய்து, காயமுற்ற ஏ. சுரேஷ்குமார் தெரிவித்தார்.

''எல்லோரும் பஸ்ஸை விட்டு இறங்கி ஓடி, குப்புறப் படுத்ததும் சில வினாடிகளில் இரண்டாவது ஷெல் பஸ்ஸின் முன்புறத்திலும் மூன்றாவது ஷெல் பஸ்ஸுக்கு அருகிலும் வீழ்ந்து வெடித்தன.

'முதலாவது வெடித்தது

(4ஆம் பக்கம் பார்க்க)

## வல்வைக்கு முன்னேற படையினர் திட்டமாம்!

கொழும்பு, மே 22

தொண்டமானாறுப் பகுதியில் நிலைகொண்டுள்ள பாதுகாப்புப் படையினர் வல்வெட்டித்துறைப் பக்கமாக முன்னேறிச் செல்லத் திட்டமிட்டிருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

''குடாநாட்டின் கரையோரப் பகுதியை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரத் திட்டம்?'' என்ற தலைப்பில் வெளியாகியுள்ள இச்செய்தியில் —

குடாநாட்டின் கரையோரத்தைப் படையினரின் கட்டுப்பாட்டிற்குள் முதலில் கொண்டுவந்து, அதன் மூலம் பாரிய ராணுவ நடவடிக்கைகளுக்கு கடற்படையினரின் முழு ஒத்துழைப்பைபெறுவதற்காக நடவடிக்கைகள் விஸ்தரிக்கப் பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

கடந்த மாதம் பலாலி இராணுவ முகாமில் தரையிறக்க முற்பட்ட விமானங்களுக்கு தொண்டமனாறு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## படைக்கு தேவையான ஆயுதங்கள் வந்து சேரத் தொடங்கியுள்ளனவாம்!

கொழும்பு, மே 22

ஸ்ரீலங்காப் படைகளுக்கு பெருமளவு ஆயுதங்கள் கடந்த வாரம் கொழும்புத் துறைமுகத்தில் வந்திறங்கியதாகவும் —

இதனால் கொழும்புத் துறைமுகத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்ததாகவும் —

கொழும்புப் பத்திரிகைச் செய்திகளை மேற்கோள் காட்டி சிங்கப்பூர் வானொலி அறிவித்தது.

இதேவேளை —

கடந்த புதனன்று ஒரு தொகுதி இராணுவத் தளபாடங்கள் கொழும்பில் இறக்கப்பட்டதாக ''புலிகளின் குரல்'' தகவல்வெளியிட்டது.

கொழும்புத் துறைமுகத்தில் அன்று சகல ஊழியர்களும் வாகனங்களும் வெளியேற்றப் பட்டு 24 மணி நேரம் துறைமுக வேலைகள் நிறுத்தப் பட்டு இராணுவ தளபாடங்கள் இறக்கப்பட்டதாக செய்திகள் தெரிவித்தன என்று 'புலிகளின் குரல்' அறிவித்தது.

ஸ்ரீலங்கா கடற்படை வாகனங்கள் துறைமுகத்திலிருந்து இராணுவத் தளபாடங்களை கொண்டு சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா இராணுவம் விடு

( 4 ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்குள் இழுபறிநிலை!

## இடதுசாரிகள் அதிருப்தி!!

கொழும்பு, மே 22

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட்சிப் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் முறுகல் நிலை உருவாகியுள்ளதாகவும் —

ஜனாதிபதி மீது இடதுசாரிகளுக்கு அதிருப்தி ஏற்பட்டிருப்பதை அடுத்து அரசுக்குள் இழுபறிநிலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அரசில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட்சிகளின் அமைச்சர்களுடன் ஆலோசனை செய்யாமல் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா முடிவுகளை எடுப்பதும் —

தொழிற்சங்க நடவடிக்கைகளை முறியடிக்க அரசு எடுக்கும் நடவடிக்கைகளும் —

சமாதானத் தீர்வைக்காண முயற்சிக்காமல் முழு யுத்தத்தில் ஈடுபட அரசு ஆர்வம் காட்டுவதும் —

இடதுசாரித் தலைவர்களுக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் உருவாகக் காரணமாக அமைந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

[ 4ஆம் பக்கம் பார்க்க]

# மலையகப் பகுதியில் "எல்லாளன் படை"

## புலிகள் உருவாக்கியுள்ளனராம்

கொழும்பு, மே 22

நாட்டின் பொருளாதாரத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் மலையகத்தில் 'எல்லாளன் படை' பிரிவுஎன்னும் புதிய பிரிவு உருவாக்கப் பட்டுள்ளதாகப் பாதுகாப்புப் பிரிவினருக்குத் தகவல்கள் கிடைத்துள்ளது.

''லங்காதீப'' சிங்களப் பத்திரிகை இத்தகவலை வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் பலர் கிழக்கு மாகாணத்திலிருந்து மலையகத்திற்கு வந்துள்ளதாகவும் —

புலிகள் இயக்க உறுப்பினர்கள் எனச் சந்தேகப்படுபவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க பதுளை மாவட்டப் பொலீசார் அதி உச்ச முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் —

ஊவா மாகாணப் பிரதிப் பொலீஸ் மா அதிபர் இந்திரா

6 ஆம் பக்கம் பார்க்க

## காயமுற்ற 11 பேர் விவரம்

பஸ் மீது நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் காயமுற்ற 11 பேரின் விவரம் வருமாறு:-

★ நடராசா சுந்தி (வயது 19) — மாலிசந்தி
★ எஸ் சண்முகலிங்கம் (வயது 57) — உடுப்பிட்டி
★ ஆர் திருக்குமரன் (வயது 26) ஆனைக்கோட்டை நவாலி வீதியைச்சேர்ந்தவர்
★ சொக்கலிங்கம் விஜயராஜா [செக்கன்] (வயது 38) — பருத்தித்துறை — ஐயனார் கலட்டி
★ கஸ்பர் குமுதா (வயது 21),— தாளையடி, செம்பியன் பற்று
★ ஜெயரத்தினம் சகுந்தலா (வயது 24) — மணற்காடு குடத்தனை
★ கணபதிப்பிள்ளை கிருபாகரன் [வயது 29) — தம்பசிட்டி
★ அண்ணாமலை சிவா (வயது 28)— வன்னிச்சிதோவிலடி, வல்வெட்டி
★ செல்லத்துரை லோகநாதன் [வயது23) — அம்பன்
★ என் ஜூலியஸ் கொலின்ஸ் [வயது 22] — செம்பியன் பற்று
★ எஸ்- சுரேஷ்குமார் [வயது 20] — புலோலி கிழக்கு

## புலிகள் பிரான்ஸிலிருந்து 6 விமானங்கள் பெற்றனர்!

### பி.ரி ஐ. செய்தி நிறுவனம் தகவல்

சிங்கப்பூர், மே 22

விடுதலைப்புலிகள் ஆறு இலகுரக நவீன விமானங்களைப் பெற்றுள்ளதாக இந்தியாவின் பி.ரி. ஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது

விடுதலைப்புலிகள் அவற்றைக் கொண்டு தற்கொலைத் தாக்குதல்களை மேற்கொள்ள முடியும் என்று இந்திய வேவுத்துறையை மேற்கோள்காட்டி அது செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் இந்த விமானங்களை பிரான்ஸிடம் இருந்து அண்மையில் வாங்கியதாகவும் அச்செய்தி நிறுவனம் தெரிவித்தது. (உ-3)

## 12,000 பரல் ம. எண்ணெய் 'மாஹேரா' கப்பலில் வரும்

யாழ்ப்பாணம் மே 22

யாழ். மாவட்ட மக்களுக்கு வழங்கவென 12 ஆயிரம் பரல் மண்ணெண்ணெய்யுடன் ''மாஹேரா'' கப்பல் இவ்வார இறுதிக்குள் பருத்தித்துறைக்கு வரவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் கொழும்புத் துறைமுகத்தில் இக்கப்பலில் மண்ணெண்ணெய் ஏற்றும் வேலைகள் நடைபெற்றுவருவதாகவும் — ஓரிரு தினங்களில் அது வடக்கு நோக்கிப் புறப்படும் என்றும் — தெரிவிக்கப் பட்டது. (உ-3)

## கொழும்பு கறுவாக்காட்டில் வட - கிழக்கு ஆளுநருக்கு ரூ.1 லட்சம் வாடகையில் வீடு!

கொழும்பு, மே 22

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகாவுக்கு, திருகோணமலையில் வழங்கப்பட்ட உத்தியோக பூர்வ வாசஸ்தலத்துக்கு மேலதிகமாக கொழும்பு கறுவாக்காட்டுப் பகுதியில் மாதாந்தம் 75 ஆயிரம் முதல் ஒரு லட்சம் ரூபா வாடகைக்கு வீடு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது

கேள்விப் பத்திரம் ஏதும் கோரப்படாமல் — உரிய சட்ட முறைகளுக்கு மாறாக கொழும்பு கிறகறிஸ் வீதியில் வீடு ஒன்றை காமினி பொன்சேகா வாடகைக்கு ஏற்பாடு செய்திருப்பதாக அப்பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கபபட்டது.

திருகோணமலையில் உள்ள வடக்கு - கிழக்கு மாகாண சபை அலுவலகத்தில் பணிபுரிய வேண்டிய ஆளுநருக்கு கொழும்பில் வாசஸ்தலம் ஏன்? என்றும் —

வடக்கு - கிழக்கு மாகாண சபைக் கடமைகளுக்காக எப்போதாவது இருந்துவிட்டு திருகோணமலைக்குச் செல்லும் காமினி பொன்சேகா சபை நடவடிக்கைகளில் என்ன பங்கை வகிக்கிறார்? என்றும் —

அப்பத்திரிகை கேள்வி எழுப்பியுள்ளது. (...)

## முற்றவெளியில் இன்று கண்காட்சி

யாழ். முற்றவெளியில் இன்று காலை 8 மணி முதல் இரவு 9.00 மணி வரை கண்காட்சி ஒன்று இடம்பெறவிருக்கிறது.

இக்கண்காட்சியில் வரலாற்றுப் புகைப்படங்கள், அதி உயர் தொழில்நுட்ப வீடியோ, இராணுவத்திடம் இருந்து கைப்பற்றப் பட்ட விமான எதிர்ப்பு ஆயுதங்கள், கனரக ஆயுதங்கள், சக்திவாய்ந்த எறிகணைகள், மிதிவெடிகள், கடற் கலங்கள், விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட விமானங்களின் பாகங்கள் என்பன மக்கள் பார்வைக்கு வைக்கப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

## சந்நிதி சுற்றாடலில் ஷெல் தாக்குதல்!

வளலாய்ப் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் நேற்று பிற்பகல் 2 மணியில் இருந்து தொடர்ச்சியாக ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழல், கெருடாவில், தொண்டமனாறு, செம்பாடு, வல்லை வெளி ஆகிய பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன

இத்தாக்குதலால் செல்வச் சந்நிதி ஆலய மணிக்கூண்டுக் கோபுரம், பூங்காவனமடம், வள்ளியம்மன் ஆலய பகுதி ஆகியன சேதத்துக்குள்ளாகின.

அப்பகுதியில் உள்ள வீடுகள் சிலவும் சேதமடைந்தன.

இதனால் நேற்று மாலை வல்லை வெளியூடான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டிருந்தது. (உ-155)

## எட்டாயிரம் ஆசிரியர்கள் வட-கிழக்கில் நியமனமாவர்

வடக்கு - கிழக்கு பாடசாலைகளில் உள்ள 8 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படவிருக்கின்றன.

வடக்கு - கிழக்கு மாகாண கல்வியமைச்சு பிரதிச் செயலாளர் திரு. சுந்தரம் டிவகலாலா இத்தகவலை வெளியிட்டார்.

இந்த வெற்றிடங்களை நிரப்ப ஆளுநருடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளதாகவும் —

விரைவில் அவற்றை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் — அவர் தெரிவித்தார்.

பாடசாலைகளில் உள்ள உடற்பயிற்சி ஆசிரியர்கள் முழுமையாக உடற்பயிற்சிப் போதனையில் மட்டும் ஈடுபடுத்தப்படவிருக்கின்றனர் என்றும் —

பாடசாலைகளில் சமயாசமய (தற்காலிக) அடிப்படையில் விளையாட்டு பயிற்சியாளர்கள் நியமிக்கப்படவிருப்பதாகவும் —

அவர் மேலும் தெரிவித்தார். (உ-3)

## புலிகளுடன் சண்டையிடுவதாக கனவு கண்டவர் சூடு! அருகில் இருந்தவர் பலி!!

விடுதலைப் புலிகளுடன் ஆக்ரோஷமாகச் சண்டையிடுவது போல நித்திரையில் கனவு கண்டுகொண்டிருந்த ஒருவர், தான் படுத்திருந்த பாய்க்கு அடியில் இருந்த துப்பாக்கியை உருவி மனம் போனபடி சுட்டார். அதனால் பக்கத்தில் நின்றிருந்த ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் மகாவலித் திட்ட 'பி' வலயத்தில் ரங்கிரதென்ன என்ற இடத்தில் அண்மையில் நடைபெற்றிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

ஜி. எம். குணபால என்பவரே இவ்விதம் துப்பாக்கி வேட்டுக்கு இலக்காகிப் பலியானார்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய வாழைச்சேனைப் பொலீஸார், துப்பாக்கிப் பிரயோகம் செய்தவரைக் கைது செய்துள்ளனர். (உ)

## வடக்கே பொருள் அனுப்ப லஞ்சம் வாங்கிய பிரிகேடியர் நீதிமன்ற விசாரணையில்!

கொழும்பு, மே 22

தடை செய்யப்பட்ட பொருள்களை வடக்கே எடுத்துச் செல்வதற்கு அனுமதி வழங்குவதற்காக லஞ்சம் வாங்கியதாகக் கூறப்படும் இராணுவ பிரிகேடியர் ஒருவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது

வடக்கே பொருள்களை எடுத்துச் சென்ற நால்வரிடமிருந்து காலத்துக்குக் காலம் இரண்டே கால் லட்சம் வரை இவர் லஞ்சம் பெற்றதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

வெலகெதர முதலியான்சலாகே பிரசன்னரத்னபண்டார என்ற இந்த பிரிகேடியருக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகளை லஞ்சத் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

இவருக்கு எதிரான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் மிகவிரைவில் எடுக்கப் படவிருக்கிறது. (உ-3)

## பொருள்களுடன் வடக்கே வரவிருந்த கப்பல் குறித்து கொழும்பில் சர்ச்சை!

கொழும்பு, மே 22

அரிசி, மா உட்பட வடக்கிற்கான பொருள்களை ஏற்றிக் கொண்டு பருத்தித்துறைக்குப் புறப்பட விருந்த இக்கப்பல் குறித்து பெரும் சர்ச்சை கிளப்பப்பட்டிருப்பதை அடுத்து, அக்கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் நிற்பதாகக் கூறப்படுகின்றது.

இக்கப்பலில் பொருள்களை ஏற்றும் பணி கடந்த வெள்ளியன்று அதிகாலை முடிவடைந்த போதிலும், அப்பொருள்களை யாழ்ப்பாணம் கொண்டு செல்ல அக்கப்பல் ஊழியர்கள் மறுத்து விட்டனர் என 'திவயின' சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருக்காக ஸ்ரீலங்கா கப்பல் கூட்டுத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஒரு மாதம் நிரம்பிய இனிக் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. சகல இன பாண்சி கோழி முட்டைகளும் பெற்றுக் கொள்ளலாம் தொடர்பு கொள்ளவும்: இல. 28/23, மணல்தறை லேன், கந்தர்மடம். [36728]

சணன் இன பால் ஆடு முதலாம் ஈத்து, 25 நாட்கள், ஒரு கடாக்குட்டியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 55, சீனியர் லேன், கலட்டி வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (36753)

பூச்சி நீக்கப்பட்ட அழகிய வெள்ளை நிற பொமரேனியன் ஆண் பெண் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு தொடர்பு: இல. 81/1 (257), கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். [36751]

## வீடு விற்பனைக்கு

வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அண்மையில் கனகரத்தினம் வீதியில் வீட்டுடன் பன்னிரண்டே கால் பரப்புக் காணி, இரு கிணறுகள், இரு குசினிகள், இரு மலசலகூடம், இரு குளியலறைகள் உட்பட பலன் தரும் மரங்களுடன் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: நரேந்திரன், இல. 383/1, நாவலர் ஒழுங்கை, ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம். [36663]

## வாங்கலாம் விற்கலாம்

நாஷனல் RX றேடியோ கசற் செற்கள் 12", 14" கறுப்பு வெள்ளை தொலைக் காட்சிகள் நியாய விலையில் வாங்கவும் விற்கவும் எம்மிடம் தொடர்பு கொள்ளுங்கள்: வீனஸ் டிக்கா வாசி அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [வானவில் கூல் பார் அருகில் ஆரியகுளம் சந்தி. (சி-1410)

## மலிவு விற்பனை

மே 22 தொடக்கம் மே 26 வரை மருத்துவ விஞ்ஞான (ELBS) நூல்களுக்கும் புனை கதைகள் மற்றும் இலக்கிய நூல்களுக்கும் இதுவரை வழங்கிய கழிவினை விட அதிக கழிவு வழங்கப்படும். யாழ்ப்பாண புத்தக நிலையம், 448, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். (சி-1411)

## இலவச சிகிச்சை

இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ் கிளை மருத்துவப் பகுதியினர் சண்டிலிப்பாய்பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த அகதி முகாம்களில் கடந்த வாரம் இலவச வைத்திய சிகிச்சைகளை மேற்கொண்டனர். (க-135)

A/L 1997

பொருளியல்
பிரத்தியேக
வகுப்புக்கள்
(Personal Classes)

ஆரம்பம்:
06 - 06 - 1995
செவ்வாய் வியாழன்
மாலை 4-00 மணி

திரு. கு. உதயன்
உடன் தொடர்பு
கொள்ளவும்.

கலை, வர்த்தக
கல்லூரி
C. C. A.
யாழ்ப்பாணம்.

ஒரு பிரிவு மட்டுமே
ஆரம்பமாகும்.
[சி-1397]

# தமிழர் இளைஞர் இருவர் கிரானில் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு, மே 22
மட்டக்களப்பு கிரானில் இரு தமிழ் இளைஞர்களை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கடந்த செவ்வாயன்று சுட்டுக் கொன்றனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த படையினர் நடத்திய கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திலேயே மேற்படி இருவரும் கொல்லப்பட்டுள்ளனர்.

கிரானைச் சேர்ந்த சிவபால சிவப்பிரபா, நடராஜா ஞானசேகரம் ஆகிய இருவருமே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர்.

மேற்படி இருவரது சடலங்களையும் இராணுவத்தினர் கொண்டு சென்றுள்ளனர்.

இச்சம்பவ வேளை மற்றொரு இளைஞரையும் படையினர் பிடித்துச் சென்றுள்ளனர்.

இதனிடையே மட்டக்களப்பு வாகனேரி ஈயாங்குளம் இராணுவ முகாம் அருகே சோதனை நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (இ-7)

## துணை வேந்தர் நியமனம்

கொழும்பு, மே 22
இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக பேராசிரியர் என்.ஆர். அந்தநாயகாவை ஜனாதிபதி நியமித்துள்ளார். (ஐ-16)

## சுகாதார பயிற்சி

சுகாதார தொண்டர்களுக்கான நான்கு நாள் பயிற்சி வகுப்பு நாளை செவ்வாய்க்கிழமை காலை 8-30 மணிக்கு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் ஆரம்பமாகும்!

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி கலாநிதி கா. த சிவபாதம் இப்பயிற்சி நெறியை ஆரம்பித்து வைப்பார். (ஐ-14-18)

# முக்கிய இடங்களை படம் பிடித்தவர் புலிகள் இயக்க சந்தேக நபராம்

கொழும்பு, மே 22
கொழும்பு நகரின் கேந்திர இடங்களைப் படம் எடுப்பதற்காக வந்திருந்த விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதாக கல்கிசைப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

கைதானவர் புலோலியைச் சேர்ந்த கந்தையா சௌந்தரராஜா என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரிடமிருந்து 12 லட்சத்து 25 ஆயிரம் ரூபா பொலீஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைக்காக அந்த இளைஞர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டார் என்றும் — விசாரணையின் போது அவரிடமிருந்து "முக்கிய தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் கல்கிசை சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் எஸ். நவரத்தினராசா தெரிவித்தார். (இ-ஐ-6)

# மாணவர் அறிவியல் கழக இவ்வார வகுப்புகள்

யாழ்ப்பாணம், மே. 22
மாணவர் அறிவியல் கழகம் மாதாந்தம் நடத்தி வரும் அறிவியல் வகுப்புகளின் தொடரில் இவ்வாரம் நடைபெறவுள்ள வகுப்புகள் பின்வருமாறு:

*திங்கள்*

★ மு.ப 10-00 மணி "ஆராய்ச்சியின் அடிப்படைகள் என்ற தலைப்பிலான சக்தி பெறப்படும் வகைகள்"

★ பி.ப 3-00 மணி 4-00 மணி ஆண்டு 10 விஞ்ஞான செயல்முறை வகுப்பு இதயத்தின் பகுதிகளை இனம் காணல்.

★ 3-00 மணி 4-00 மணி வரை ஆண்டு 9 கேத்திர கணித செயன்முறை வகுப்பு (வட்டம்).

★ பி.ப 4-00 மணி — 5-00 மணிவரை ஆண்டு 10, 11 கேத்திரகணித செயல்முறை வகுப்பு (இணைகரம்).

★ மாலை 5-30 மணி — 6-30 மணிவரை ஆங்கில வகுப்பு.

*செவ்வாய்*

★ மு.ப 9-00 மணி — 2-00 மணிவரை ஆண்டு 9, 10, 11 கட்டுவன்புலம் மகாவித்தியாலயம் விஞ்ஞான செயன்முறை வகுப்பு.

★ பி.ப 3-00 மணி — 4-30 மணிவரை ஆண்டு 8 சமாந்தரம்.

*புதன்*

★ மு.ப 9-00 மணி — 2-00 மணிவரை ஆண்டு 11 கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம் சுவாசை சோதனை, ஏலைட் இனம் காணல், காபனீரொட்சைட், ஒட்சிசன், குளோரீன், ஐதரசன் தயாரிப்பு வாயுக்களை இனங்காணல்.

★ பி.ப 3-00 மணி — 4-00 மணிவரை உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல்.

★ பி.ப 4-00 மணி — 5-00 மணிவரை அறிவியல் ஒளிப்படம்.

★ 5-00 மணி — மாலை 6-00 மணிவரை ஆராய்ச்சியின் அடிப்படைகள் என்ற தலைப்பிலான சக்தி பெறப்படும் வகைகள் பற்றிய வகுப்பு.

*வியாழன்*

★ பி.ப 3-00 மணி 4-30 மணிவரை ஆண்டு 8 விஞ்ஞான செயன்முறை வகுப்பு குழிவாடி, குவிவாடிகளில் விம்பங்களை அவதானித்தல்

*வெள்ளி*

★ மு.ப 9-00 மணி — 12-00 மணிவரை ஆண்டு 11 கொக்குவில் இந்துக்கல்லூரி ஒளிப்படக்காட்சி நரம்புத் தொகுதி, ஆவர்த்தன அட்டவணை, உயிர் வாழும் கிரகம் — 2

★ பி.ப 3-00 மணி — 4-00 மணிவரை ஆண்டு 11 விஞ்ஞான செயன்முறை வகுப்பு அங்கி - அங்கி இடைத் தொடர்பை காட்டும் அங்கி மாதிரிகள் சிலவற்றை அவதானித்தல்.

★ பி.ப 4-00 மணி — 5-00 மணிவரை, ஆண்டு 10, 11 கேத்திரகணித செயன்முறை வகுப்பு "பரப்பளவு தொடர்பான அமைப்பு"

*சனி*

★ பி.ப 3-00 மணி — 4-00 மணிவரை ஆண்டு 9 விஞ்ஞான செயன்முறை வகுப்பு இசைஇணை. [ஐ]

## மருதங்கேணியில் தேங்காய் விலை வீழ்ச்சி

வடமராட்சி, மே 22
மருதங்கேணிச் சந்தையில் தேங்காயின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

பிரதி செவ்வாய், வெள்ளி, ஞாயிறு தினங்களில் நடைபெற்று வரும் மருதங்கேணிச் சந்தையில் தேங்காய் ஒன்று 8 ரூபா தொடக்கம் 10 ரூபா வரை விற்பனையாகிறது. (ஐ-173)

## ஆலயங்களில்

சண்டிலிப்பாய் கல்வளை ஸ்ரீ பரமானந்தப் பிள்ளையார் ஆலயத்தின் 48ஆம் நாள் மண்டலாபிஷேக சங்காபிஷேகம் இன்று திங்கட்கிழமை நடைபெற உள்ளது.

இன்று காலையில் விநாயக பெருமானுக்கு 1008 சங்குகளினால் அபிஷேகம் நடைபெறும்.

இரவு திருவூஞ்சல், சுவாமி வீதியுலா நடைபெறுவதுடன் சங்கீத பூஷணம் வி. கே. நடராசாவின் தெய்வீக இசை அரங்கு, சைவப் புலவர் பொன் தெய்வேந்திரனின் சமயச் சொற்பொழிவு என்பனவும் இடம்பெறும். (க-152-135)

## கடலக வளம் புதிய பாடம்

வடமராட்சி, மே 22
மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் கடலக வளம் பாடம் போதிக்கப்பட்டு வருகிறது

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஜி.சி.ஈ. சாதாரணதர பரீட்சைக்கு 14 மாணவர்கள் இப்பாடத்துக்கு தோற்றவுள்ளார்கள். (ஐ-173)

## மலேரியா நோய் இலவச நூல்

சண்டிலிப்பாய், மே. 22
மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் 'மலேரியா நோய் பிரச்சினைகளும் நாம் செய்ய வேண்டியவைகளும்' என்ற தலைப்பில் கைநூல் ஒன்று வெளியிடப்பட்டு இலவசமாக விநியோகிக்கப்படுகிறது. யாழ். பிரதேச மலேரியா தடுப்பு வைத்திய அதிகாரியும், மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியுமான டாக்டர் என். விவேகானந்தன் இந்த நூலை எழுதியுள்ளார். (க-135-175)

## சமய நூல் விற்பனை நிலையம்

சுழிபுரம், மே 22
சமய நூல்கள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றை வழக்கம்பரை பஜனைச் சபையார் திறந்துள்ளனர். சுழிபுரம் பிரதான வீதியிலுள்ள கட்டடத்தில் இந் நிலையம் அமைந்துள்ளது, (க-28)

## மோசமான வீதி

சுழிபுரம், மே 22
சுழிபுரம் காளுவன் சந்தியில் இருந்து சித்தங்கேணிச் சந்தி வரையும் உள்ள பிரதான வீதி போக்கு வரத்துச் செய்ய முடியாமல் பாரிய கிடங்குகளாகவுள்ளது. வாகனங்கள் வீதி யால் போக முடியாமல் உள்ளது வீதி திருத்த வேலைகள் விரைவாக நடைபெறாது போனால் மழை காலத்தில் வீதிகள் எங்கும் குளமாகவே காட்சி அளிக்கும் என்று தோன்றுகிறது.

ஊரெழு
சைவாலய முன்னேற்றக் கழக
பத்தாவதாண்டு நிறைவுப் பணி
நிதிக்காக
யாழ். பல்கலைக்கழக
சமூக விஞ்ஞான மன்றத்தினர்
வழங்கும்
சி. ஜெயசங்கரின்
★ தீ சுமந்தோர் ★

இன்று [22-5-1995] திங்கள் நடைபெறுவதாக இருந்த மேற்படி நாடகம் தவிர்க்கமுடியாத காரணங்களால் எதிர்வரும் 27 - 5 - 1995 சனிக்கிழமைக்குப் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறோம். சிரமத்துக்கு வருந்துகிறோம்.

இடம்: தமிழ்த்தாய் அரங்கு, ஊரெழு
நேரம்: மாலை 6 00 மணி
அன்பளிப்பு: 20/-
—சைவாலய முன்னேற்றக் கழகத்தினர்,
(36755)

# 31-ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 15 — 08 — 1922



மறைவு: 22 — 04 — 1995

திருமதி
செல்லத்துரை சேதுப்பிள்ளை
திதி: 22 - 05 - 1995

அன்பால், அறிவால், பண்பால் எங்களை எல்லாம் வழி நடத்திய அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைத் தினமும்பிரார்த்திக்கும்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

நாவற்குழி, கைதடி.
(பாடசாலைக்கு அருகில்) [36746]

# கண்ணீர் அஞ்சலி

திருமதி
புவனேஸ்வரி வன்னியசிங்கம்
(நடன ஆசிரியை யாழ்/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை பருத்தித்துறை)

கடமையிலே கண்ணியமும், வாழ்விலே எளிமையும்,
உள்ளத்திலே உயர்வும், கலையிலே மேதாவியும்,
கல்லூரியின் வளர்ச்சியிலே
கண்ணும் கருத்துமாக இருந்து
12 - 05 - 95 வெள்ளிக்கிழமை இன்னுயிர் நீத்த

நடன ஆசிரியை
திருமதி புவனேஸ்வரி வன்னியசிங்கம்

அவர்களின் மறைவிற்கு
எமது கண்ணீர் அஞ்சலியை செய்து
அவரின் ஆத்ம சாந்திக்காக
இறைவனை வேண்டுகிறோம்.

மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை
பருத்தித்துறை
பழைய மாணவர் சங்கம்.
(சி-1245)

# 9-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 27 — 05 — 1969



உதிர்வு: 31 — 05 — 1986

செல்வி ரஜினி பாலசிங்கம்
(சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி)
திதி: 22 - 05 - 1995

படைத்தவன் பாதமலர் பணிந்திடவே - நீ
விரைந்திட்டாய் விண்ணுலகு விரைவாக
மண்ணுலகில் எமையாற்ற யாருளரோ!
தணியுமோ எம்துயர்தான் அம்மா!

உன் ஆத்ம சாந்தி வேண்டிப் பிரார்த்திக்கும்;

அப்பா, அம்மா, தம்பி ரஞ்சித்,
(ரஜினி கிறீம் ஹவுஸ்)
உற்றார், உறவினர், நண்பர்கள்.

32, குருசோ வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். [36752]

# ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் M. S. அரியநாயகம்
(முன்னாள் P. W. D. ஓவசியர்)

மலர்வு: 06 — 03 — 1906
உதிர்வு: 22 — 05 — 1994

ஆருயிர் பப்பா!
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்

தகவல்:
அ. [illegible] (மகன்)
(கனடா)
மணியகாரன் [illegible]
கொக்குவில். (36750)

உ
ஸ்ரீ கணேசாயநம
பிரம்மோபதேச யக்ஞோபவீத தாரண
# உபநயன அழைப்பு

அநேக நமஸ்காரம், ஆசீர்வாதம், உபயக்ஷேமம்.
சிவஸ்ரீ, பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திர சுவாமி திருவருள் முன்னிற்க மங்களகரமான யுவ ஹூ வைகாசி மீ 10ஆம்நாள் (24-05-95)புதன் கிழமையும் உத்தரட்டாதி நட்சத்திரமும் அமிர்தசித்த யோகமும் கூடிய சுபதினம் காலை 7-52 — 9-04 வரையுள்ள மிதுன லக்ன சுபமுகூர்த்தத்தில்

எங்கள் சிமந்த புத்திரன
★ சிரஞ்ஜீவி வேணுகோபால சர்மன் ★

அவர்களுக்கு பிரம்மோபதேசயக்ஞோபவீத தாரணம் செய்ய ஸ்ரீமந் நாராயணன் துணையுடன் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் சுற்ற மித்திர சகிதம் குடும்ப சமேதராகச் சமூகம்தந்து சிறப்பித்து, செல்வனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

சுபமஸ்து

இங்ஙனம்
சிவஸ்ரீ சி. வாசுதேவக்குருக்களும்,
பாரியாரும்,

ஸ்ரீவீரபத்திரர்கோயில்,
அல்வாய் வடக்கு,
அல்வாய். (36504)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ_தயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## எமக்கென ஒரு நீதிமுறை

எமது தேசிய இனத்தின் பண்பாட்டுக்கு அமையவும், மாறிவரும் உலகின் நவீன அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்றதாகவும் எமது சட்டமுறை உருவாக்கப்பட வேண்டும்.

தமிழீழ நீதியாளர்களுக்கு உறுதிப்பிரமாணம் செய்து வைத்துப் பேசுகையில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் இவ்வாறு தெரிவித்தார்.

ஈழத் தமிழர்கள் சுமார் நான்கு நூற்றாண்டுகளாக வெளிநாட்டு ஆதிக்கத்துக்கு ஆட்பட்டு வாழ நேரிட்டது. அதற்கு முன்னர் தமிழரசர்கள் அன்றையநிலைக்கு ஏற்ப தமக்கென நெறிகளை வகுத்து நீதிபரிபாலனம் செய்து வந்தனர்.

வெளிநாட்டார் ஆதிக்கத்தில், ஒல்லாந்தர், போர்த்துக்கேயர், ஆங்கிலேயர் என்ற அவர்கள் தத்தமது நாடுகளின் சட்டங்களை இங்கு நடைமுறைப்படுத்தினர்.

வெளிநாட்டார் வகுத்த சட்டங்கள், அவர்தம் ஆட்சியியல் தேவையைப் பூர்த்தி செய்வனவாகவும், தத்தம் நாட்டு வாழ்க்கைமுறை, பண்பாட்டுக்கு ஏற்ப வகுக்கப்பட்டனவாகவும் இருந்ததில் ஆச்சரியமில்லை.

அவர்கள் ஒவ்வொருவரும் தத்தமது ஆட்சிக் காலங்களின் போது, தங்களது வாழ்க்கை முறை, கலாசாரம், பண்பாடு என்பனவற்றை தமது ஆட்சிச் செல்வாக்கின் துணை கொண்டு இந்த மண்ணின் மக்கள் மீது திணித்தார்கள்.

தாம் திணித்தவற்றுக்கு பங்கம் ஏற்படாது பேணும் வகையிலேயே, ஆட்சி விதிகளையும், சட்ட விதிகளையும் வகுத்தனர்.

வெளிநாட்டார் ஆதிக்கம் முடிந்து இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னரும் கூட, வெளிநாட்டவர்களின் சட்ட அமைப்பியல் முறைகளின் செல்வாக்கு தொடரவே செய்கிறது, வெளிநாட்டவர்களின் சட்டங்களை மருவியே இலங்கையின் சட்டமுறை வகுக்கப்பட்டிருக்கிறது. றோமன் சட்டம், பிரிட்டிஷ் சட்டம் என்று பல்வேறு நாடுகளின் சட்டச் சாம்பாராகவே இலங்கையின் சட்ட அமைப்பு உள்ளது.

இத்தகைய ஒரு நிலையைத் தவிர்த்து, தமிழ் மக்களின் பண்பாட்டையும், வாழ்க்கை முறையையும், கலாசாரம் மற்றும் ஒழுக்க நெறிகளையும் பேணும் விதத்தில் புதிய சட்டங்களை ஆக்கும் பணியில் தமிழீழ நீதிநிர்வாகத்துறை ஆரம்ப முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறது. இது முற்றிலும் புதிய வழி ஒன்றை அமைக்கிறது. தமிழீழத் தேசியக் கட்டமைப்பின் பிரதான தூண்களில் ஒன்றாக விளங்குகிறது.

அடுத்தவன் தனக்கும், தனது சூழலுக்கும் ஏற்ப வகுத்து கொண்டவற்றை அப்படியே கொண்டு வந்து எங்கள் பிரதேசங்களில் அறிமுகப்படுத்துவது, நடைமுறைப்படுத்துவது என்பது நாம் எமது சொந்தக் காலில் நிற்கத் தகுதியில்லாதவர்கள் என்று பறை சாற்றுவதாகும்.

பொருளாதாரத் திட்டமாயினும் சரி, பொறியியல் திட்டமாயினும் சரி, தொழில்நுட்பத் திட்டமாயினும் வெளிநாட்டவர்கள் வகுத்தவற்றை அப்படியே எங்கள் பிரதேசங்களில் நடைமுறைப்படுத்துவது, ஒப்புவிப்பது என்பது ஒருவித அடிமை மோகமே!

இது எல்லாத் துறைகளிலும் தவிர்க்கப்பட வேண்டும் ஆட்சியியல், பொருளியல், நீதியியல், அபிவிருத்தியியல் உட்பட்ட சகல துறைகளிலும் எமது மண்ணுக்கும், மக்களுக்கும், எங்கள் வாழ்க்கை முறைக்கும் உகந்த வகையில் நடைமுறைத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். அப்போதுதான் தமிழர்களின் தனித்துவத்தைப் பேண முடியும்! மேலும் மேம்படுத்த இயலும்.

முன்னேறிவரும் நவீன உலகின் போக்கையும், வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு புதிய மாற்றங்களைச் செய்தாலே, எமது எதிர்காலச் சந்ததியினர் வளமான சமுதாயமாக பரணமிக்க வழி பிறக்கும்.

---

பயிற்சி, ஆலோசனைகள் மட்டுமே வழங்கப்படும்

# இந்தியா தனது இராணுவத்தை இலங்கைக்கு அனுப்ப மாட்டாது

## வெளியுறவு அமைச்சர் பாட்டியா அறிவிப்பு

அமிர்தசரஸ், மே 22

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இலங்கை அரசுக்கு உதவுவதற்கு இந்தியத் துருப்புகள் அனுப்பிவைக்கப்பட மாட்டாது என்று இந்திய வெளியுறவு இணை அமைச்சர் ஆர். எல். பாட்டியா திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அமிர்தசரஸில் செய்தியாளர்களிடம் அவர் இதனை தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு இந்தியாவின் உதவியை இலங்கை அரசு நாடியமையை அப்போது அவர் உறுதிப்படுத்தினார்.

இலங்கை அரசு வேறு பல நாடுகளிடமும் இவ்வாறு உதவி கோரியுள்ளது என்றும்—

இலங்கை அரசின் கோரிக்கை குறித்து பரிசீலனை செய்துவரும் இந்தியா விரைவில் இதுபற்றி முடிவு எடுக்கும் என்றும் தெரிவித்தார்.

எனினும் இராணுவரீதியாக இந்தியா நிச்சயமாக இலங்கை பிரச்சினையில் தலையிடாது என்றும்—

துருப்புகளுக்கு பயிற்சி வழங்குதல், ஆலோசனை வழங்குதல் மற்றும் தகவல் பரிமாற்றம் ஆகிய விடயங்களை உள்ளடக்கியதாக இந்தியாவின் உதவி அமையும் என்றும் திரு பாட்டியா தெரிவித்தார். (ஐ)

# தமிழருக்கு எதிரான போருக்கு இந்தியா உதவி வழங்கக் கூடாது!

### டாக்டர் ராமதாஸ் தெரிவிப்பு

இந்தியாவோ அல்லது மற்ற நாடுகளோ தமிழர்களுக்கு எதிரான போரில் ஸ்ரீலங்கா அரசுக்கு எந்த வகையில் உதவி செய்தாலும் அது உலகில்வாழும் ஒன்பது கோடி தமிழர்கள் மீதும் தொடுக்கப்பட்ட யுத்தமாக கருதப்பட வேண்டும்.

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் இவ்வாறு எச்சரித்துள்ளார்.

தமிழீழப் பிரச்சினை சமாதான முறையில் தீர்த்து வைப்பதற்கு பிற நாடுகளின் தலையீடு இருக்க வேண்டுமே தவிர அதை விட்டு இலங்கையில் வாழும் முப்பத்தைந்து லட்சம் தமிழர்களையும், அவர்களின் நியாயமான கோரிக்கைகளையும் புறக்கணிப்பதற்கு உதவுவதாகஇருக்கக்கூடாது

இந்தியா ஸ்ரீலங்காவுக்கு போரில் உதவிசெய்தால் அது இந்தியாவிலுள்ள ஏழு கோடி தமிழர்களின் சுய மரியாதையின் மீதுகை வைக்கும் தேவையற்ற செயலாகும். இவ்வாறு டாக்டர் ராமதாஸ் மேலும் தெரிவித்தார். (ஐ-7)

## மீன் நியமனம் வழங்க அனுமதி

யாழ். மாவட்ட சுகாதார திணைக்களத்தில் கடமையாற்றிக்கொண்டிருக்கும் 60 வயதுக்கு மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட மருத்துவ அதிகாரிகளையும், பொது சுகாதார பரிசோதகர்களையும் தொடர்ந்து சேவையில் வைத்திருக்க வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள செயலாளர் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அனுமதி வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

தற்போது ஏற்பட்டுள்ள ஊழியர் பற்றாக்குறையை கருத்திற்கொண்டு இந்த மீள் நியமனத்தை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

★ இராணுவத்தில் புதிதாக சில நியமனங்கள்:

# மேலதிக தயார் நிலை தாக்குதல் பிரிவின் தளபதியாக சிறி பீரிஸ்!

கொழும்பு, மே 22

இலங்கை இராணுவத்தில் புதிய நியமனங்கள் சில மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலதிக தயார் நிலை தாக்குதல் பிரிவுக்கு தளபதியாக இருந்த பிரிகேடியர் ஜனக பெரேரா வெலி ஓயா [மணலாறு] பிரதேச வடகிழக்கு தளபதியாக மீள நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனக பெரேராவின் இடத்துக்கு பிரிகேடியர் சிறிபீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் நடைபெற்ற சமாதானப் பேச்சுகளின் போது அரசதரப்பு பிரதிநிதிகள் குழுவில் பிரிகேடியர் சிறி பீரிஸ் இடம் பெற்றிருந்தது தெரிந்ததே.

இதேவேளை—

இராணுவ செயலாளராக கடமையாற்றி வந்த நளின் அங்கமன இராணுவத் தலைமையகத்துக்கும்—

இராணுவத் தலைமையகத்தின் நடவடிக்கைகள் பணிப்பாளரான பிரிகேடியர் குணரத்தன இராணுவ செயலாளர் பதவிக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவத்தின் காலிபிரிகேட் தளபதியான பிரிகேடியர் லியனகே இராணுவ நடவடிக்கை பணிப்பாளராக தலைமையகத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளனர். (ஐ)

கஞ்சிகுடிச்சாறு தாக்குதல் சம்பவம்:

## மற்றொரு சிப்பாயின் சடலம் காட்டுப் பகுதியில் மீட்பு

மட்டக்களப்பு, மே. 22

அம்பாறை மாவட்ட கஞ்சிகுடிச்சாறு பகுதியில் அதிரடிப் படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் போது பலியான இராணுவத்தினர் ஒருவரின் சடலம் கடந்த வாரமும் காட்டுப் பகுதியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி தாக்குதல் சம்பவம் குறித்து பாதுகாப்பு அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கெரில்லா தாக்குதலுக்கு எதிரான விசேட பயிற்சி பெற்ற அதிரடிப்படையினர் சந்தித்த முதலாவது பெரும் தாக்குதல் சம்பவம் இது என்பதால் படையினரிடம் இருந்து ஆயுதங்கள் பற்றியும் விடுதலைப் புலிகளால் அபகரித்துச் செல்லப்பட்ட ஆயுதங்கள் பற்றியும் அதிரடிப்படை அத்தியட்சகர்லால் ஜயசுந்தர விசாரணை மேற்கொண்டு வருகின்றார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-14)

## அமைச்சு அலுவலகத்தில் தமிழ் தம்பதியினர் கைது

கொழும்பு, மே 22

விவசாய, காணி, வனவள அமைச்சுக்கு சமீபமாக, சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய தமிழ்த்தம்பதியினர் அமைச்சின் பாதுகாப்பு அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தற்போது பொலீஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஆண் அநுராதபுரத்தைச் சேர்ந்த நில அளவையியலாளர் என்றும் பெண் மட்டக்களப்பைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அந்தப் பெண் தனது பையினுள் "கமெரா" ஒன்றை மறைத்து வைத்திருந்தார் என்றும் அவர்கள் சந்தேகப்படும்படியாக விவசாய காணி வனவள அமைச்சரின் வாசஸ்தலத்திற்கு அண்மையில் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## புதைக்கப்பட்ட சடலத்தை எடுக்க முயற்சித்த மதயானை

தன்னால் அடித்துக்கொல்லப்பட்டு, புதைக்கப்பட்ட நபர் ஒருவரின் சடலத்தை தோண்டி எடுக்க முற்பட்ட மத யானை ஒன்றை கிராம மக்கள் விரட்டி அடித்தனர்.

மாத்தளைப் பகுதியில் மதம்கொண்ட காட்டுயானையின் அட்டகாசம் அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது.

கடந்த 4 மாதங்களில் மட்டும் 17 பேர் யானையால் தாக்கப்பட்டு உயிரிழந்து உள்ளனர்.

அண்மையில் எலஹர கிராமத்துள் புகுந்த காட்டு யானை ஆர். எம். தஸநாயக்க என்பவரை கொன்று, கர்ப்பிணியான அவரின் மனைவியையும் தாக்கியுள்ளது. இதனால் வயிற்றிலுள்ள சிசு இறந்துவிட்டது. கொல்லப்பட்ட தஸநாயக்காவின் உடல் கிராமத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

மறுநாள் மீண்டும் கிராமத்துக்குள் புகுந்த அந்த மத யானை தன்னால் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட அந்த நபரின் சடலத்தைத் தோண்டி எடுக்க முயற்சித்தது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-14)

# வெள்ளை மாளிகை செல்லும் வீதி தடை!

வாஷிங்டன், மே 22

அமெரிக்க அதிபரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலமான வெள்ளை மாளிகைக்குச் செல்லும் வரலாற்றுச் சிறப்பு மிக்க பென்சில்வேனியா அவெனியூ வீதி பாதுகாப்பு காரணங்களுக்காக மூடப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் ஒக்லஹோமா நகரில் அண்மையில் நடந்த பெரும் குண்டு வெடிப்புச் சம்பவத்தை தொடர்ந்தே வெள்ளை மாளிகையின் பாதுகாப்பு குறித்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

உத்தியோக பூர்வ அறிவித்தல் எதுவும் விடுக்கப்படாமலே அந்த வீதியின் ஒரு பகுதி நேற்று முன்தினம் அதிகாரிகளால் மூடப்பட்ட[illegible]

## புலிகளின் குரல் வானொலியில்

22 — 05 — 1995

திங்கள் இரவு

- ★ 8-02— தளிர்கள்— சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
- ★ 8-20— சமகாலப் பார்வை
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40— தரிசனம்— ஓவியர் திரு. ராஜனுடனான செவ்வி

23 — 05 — 1995

செவ்வாய் காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7 15— இன்றைய தாரகை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40— தாயகப்பாடல்கள்

### தமிழீழ வானொலியில்

திங்கள் மாலை

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிக் கீதம்
- ★ 5-10 புதியவை
- ★ 5-15— ஆழியமுதம்
- ★ 5-30— மாணவர் பக்கம்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6 02— நேயர் நெஞ்சம்
- ★ 6-15— [illegible] செய்திகள்
- ★ 6-20 [illegible]

## அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சி, மே 22

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களின் கூட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை பி. ப. 2 மணிக்கு சாவகச்சேரி றிபேர்க் கல்லூரி மண்டபத்தில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும். [க-117]

## மெய்வல்லுநர் போட்டிகள்

தென்மராட்சி, மே 22

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் இன்றும், 25ஆம், 27ஆம்திகதிகளிலும்,மட்டுவில் மகாவித்தியாலய மைதானத்தில் கோட்டக் கல்விப்பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன.

27ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிப் போட்டிக்கு முதன்மை விருந்தினராக கல்வி வலயம் I இன் கல்விப் பணிப்பாளர் இ. சிவானந்தன் கலந்து கொள்வார். (க-117)

## ஆசிரிய கலாசாலைகளுக்கு அதிபர்கள் நியமனமாவர்

### விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

பலாலி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளுக்கு புதிய அதிபர்களை நியமிப்பதற்கு கல்வி, உயர்கல்வி அமைச்சு விண்ணப்பங்களை கோரியுள்ளது.

கல்வி நிர்வாக சேவையின் 11ஆம் வகுப்பைச் சேர்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன் சுயவிவரங்களுடன் விண்ணப்பங்களை அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது [க-3]

## ஊரடங்கு வதந்தியால் மட்டக்களப்பில் பதற்றம்

மட்டக்களப்பு, மே 22

மட்டக்களப்பு மாவட்டத்தில் வார இறுதியில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்படலாம் என்று பரவிய வதந்தியினால் அங்கு பொதுமக்கள் முண்டியடித்துக்கொண்டு பொருள்களை வாங்குவதில் ஈடுபட்டனர்.

பதற்றமடைந்த மக்கள் பொருள்களை அதிகளவில் வாங்கி சேமித்து வைப்பதில் நாட்டம் காட்டுகின்றனர்.

இதனால் கடைகளில் சில பொருள்களின் விலைகள் திடீரென அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## சூழல் பாதுகாப்பு தினம் தொடர்பான நிகழ்வுகள்

ஜூன்5 சர்வதேச சூழல் பாதுகாப்புதினத்தை இவ்வாண்டு சிறப்பாக அனுஷ்டிக்க தென்மராட்சி பிரதேச செயலகத்தினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

அதனை ஒட்டி பிரதேச எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தூர்ந்து போயுள்ள குளங்களை ஆழமாக்கல், வீதிகள் பொதுக்கிணறுகளைச் சுத்தம்செய்தல், நீர் வழிந்தோடக் கூடிய வகையில் வாய்க்கால்களைப் புனரமைத்தல் போன்றவை சிரமதான முறையில் செய்யபபடவுள்ளன.

இவற்றுடன் சகல கிராம அலுவலர் பிரிவிலும் சூழல் பாதுகாப்புத் தொடர்பான கருத்தரங்குகளும், கலை நிகழ்வுகளும் நடத்தப்படவுள்ளன.

அன்றைய தினம் சாவகச்சேரி றிபேர்க் கல்லூரியில் சூழல் பாதுகாப்பு தினக் கருத்தரங்கும் இடம் பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. [க-117]

## மருதங்கேணி ஆஸ்பத்திரி: மருந்துக்கு தட்டுப்பாடு

வடமராட்சி, மே 22

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள பிரதான வைத்தியசாலையான மருதங்கேணி அரசினர் வைத்தியசாலையில் மருந்துவகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் பொதுவாக சிறுவர் முதல்பெரியோர் வரை காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டவர்களே மருதங்கேணி, அம்பன் அரசினர் வைத்தியசாலைகளில் அதிகளவில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். (ஐ-173)

## ஊனமுற்றோர் விவரம் திரட்டல்

வலி. மேற்கு, மே 22

வலி மேற்கு பிரதேச செயலர்பிரிவுக்குட்பட்ட 25 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் கிராம உத்தியோகத்தர்களினால் ஊனமுற்றவர்களின் விவரங்கள் முச்சக்கர வண்டி, ஊன்றுகோல், ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலையில் உருவாக்கப்படும் செயற்கைக்கால் கை பாதம் முதலியன வழங்குவதற்கு திரட்டப்படுகின்றன. (க-175)

## பெந்தோட்டையில் மூன்று தமிழர் கைது

கொழும்பு, மே. 22

பெந்தோட்டையில் உள்ள உல்லாச ஹோட்டல் ஒன்றை புகைப்படம் பிடித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் மூன்று தமிழ் இளைஞர்களை பெந்தோட்ட பொலீஸார் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ]

## போஷாக்குவார கலை நிகழ்வுகள் போட்டிகள்

யாழ்ப்பாணம், மே 22

எதிர்வரும் ஜூலை மாதம் வலி மேற்கு செயலகத்தால் நடத்தப்படவிருக்கும், போஷாக்கு வார நிகழ்வுகளில் அரங்கேற்றுவதற்கான, போஷாக்கு சம்பந்தமான நாடகம், கூத்து, நடனம், நாட்டிய நாடகம், பாடல், கவிதை] போன்ற கலை நிகழ்வுகளை தெரிவு செய்வதற்கான போட்டிகள் இம் மாத இறுதியில் நடைபெற உள்ளன.

ஜூலை 3ஆம் திகதி தொடக்கம் 9ஆம் திகதி வரை கொண்டாடப்படவுள்ள போஷாக்கு வாரத்தில் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தோறும் கருத்தரங்குகள் நடத்தவும் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் கண்காட்சி ஒன்றைநடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வலி. மேற்கு பிரதேச செயலர் அறிவித்துள்ளனர். (க-5)

## இன்று

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க ஒன்றுகூடல் இன்று திங்கள் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. [க]

★ ★ ★

யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்க ஒன்றுகூடல் இன்று முழுநாள் நிகழ்ச்சியாக கல்லூரியில் நடைபெறும். [க]

★ ★ ★

சண்டிலிப்பாய், மே 22

மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த ஒன்றுகூடல் இன்று 22ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (க-135)

★ ★ ★

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நடத்தும் சொற்புணர்ச்சி பற்றிய கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை காலை 9-30 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெறும். இலக்கண வித்தகர் பண்டிதர் நமசிவாய தேசிகர் கருத்துரை வழங்குவார். [க]

## மரக்கறி விலை உயர்வு

சண்டிலிப்பாய், மே 22

யாழ் மாவட்டத்தில் மரக்கறிகளின் விலைகள் மிகவும் அதிகரித்துள்ளன. அண்மையில் வலி. மேற்கு, வலி.தென்மேற்கு பகுதிகளில் பெய்த பெருமழையினாலும், வெள்ளத்தினாலும் விவசாயிகளின் கத்தரி, வெண்டி,பாகற்காய். படற்றங்காய், கரட் போன்ற பல்வேறு மரக்கறி பயிர்கள் அழிந்து விட்டதால் இந்த விலையுயர்வு ஏற்பட்டுள்ளது வெங்காயத்தினதும் மிளகாயினதும் விலைகளும் அதிகரித்துள்ளன. [க-135)

## நலன்புரிசங்க 5ஆவது ஆண்டு நிறைவு விழா

சண்டிலிப்பாய், மே 22

மக்கள் நலன்புரிசங்கத்தின் 5ஆவது ஆண்டு நிறைவு விழாவும் முதலுதவி சான்றிதழ் வழங்கும் வைபவமும் எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் திரு. ஏ. ஜெகதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் பிரதம அதிதியாக இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ்ப்பாண கிளை தலைவர் டாக்டர். எஸ். சிங்கராயர் கலந்து கொள்வார்.

விழாவில் முதலுதவிப் பயிற்சி இறுதிப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (க-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டு நிகழ்வுகள்

தென்மராட்சிக் கல்விக் கோட்டத்திற் குட்பட்ட பாடசாலைகளுக் கிடையேயான மெய்வல்லுநர் போட்டிகள் மட்டுவில் மகாவித்தியாலயத்தில் இன்றும் வியாழனன்றும், சனியன்றும் நடைபெறும்.

இறுதி நாளான சனிக்கிழமையன்று தென்மராட்சிக் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. புஸ்பா கணேசலிங்கம் தலைமையில் நிகழ்வுகள் இடம் பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலயம் I இன் கல்விப் பணிப்பாளர் திரு.இ சிவானந்தனும் கௌரவ விருந்தினராக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த திரு கி. பாப்பாவும் கலந்து கொள்வர். (உ-31)

★ ★ ★

வலி. கிழக்கு உதைபந்தாட்டச் சங்கம் இணைந்த கழகங்களுக்கு இடையில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் ஆரியாலை மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3 00 மணி:- சென். அன்ரனீஸ் எதிர் உதயசூரியன்.

★ 4 00 மணி:- யுத்கார் பேஸ் எதிர் விண்மீன்

★ 5 00 மணி:- கொய்யாத் தோட்டம் எதிர் பாடுமீன்.

★ ★ ★

ஜெவி ஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகம் ஈ எஸ். ரேம்பலம் சகநிறுவனத்தின் ஆதரவுடன் ஜெவி ஸ்ரார்ஸ் வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டம் ஒன்று இன்று பிற்பகல் 1.00 மணி முதல் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும். இந்த ஆட்டத்தில் ஜெவி ஸ்ரார்ஸ் கோல்ட்ஸ் அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் புளூஸ் அணி மோதும்.

★ ★ ★

வண. சகோதரர் ஹில்லறி ஜோசப் ஞாபகார்த்த கேடயத்துக்காக யாழ்ப்பாணம் "டிலாசால் சகோதரர்கள் சபை" நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் யாழ். பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3 0 0 மணி: அமலமரித்தியாகிகள் குருத்துவக் கல்லூரி அணி எதிர் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி

★ 4 00:- மணி ஜொனியன்ஸ் கறுப்பு அணி எதிர் ஓல்ட் கோல்ட்ஸ் அணி.

### வல்வைக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் இருந்து ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டதால், அப்பகுதியை பாதுகாப்புப்படையினர் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவர முயல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து கூட்டுப்படைத் தலைமை அலுவலகப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்காவிடம் கேட்டபோது இராணுவ இரகசியங்களை வெளியிட முடியாது எனக் கூறி, கருத்து எதுவும் வெளியிட மறுத்துவிட்டார் — இப்படி அந்தப் பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசையா நாகரத்தினம்

திருமதி இராசையா நாகரத்தினம் காலமானார். நவாலியைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் இராசையாவின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான திருமதி கனகரட்ணம், திரு மருதலிங்கம், திருமதி நடராசா ஆகியோரது அன்புச் சகோதரியும், திரு. ஜெயரட்ணம், (அமெரிக்கா), திருமதி செல்வராணி, கைலைநாதன் ஆகியோரது அன்புத் தாயாரும், திரு. கைலைநாதனது (அரசினர் வைத்தியசாலை,சங்கானை) அன்பு மாமியும், ஆதர், ஷெரி ஐங்கரன், அபிராமி, மயூரன், ஆகியோரது அன்புப்பேர்த்தியும், சுகுணாவின் வளர்ப்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இல்லத்தில் இறுதிக்கிரியைகள் இன்று (22-05 95) திங்கட்கிழமை மு.ப. 8 00 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
திரு. தி. கைலைநாதன்
(மருமகன்)

ஆனைக்கோட்டைச்சந்தி.

(36757)

### செல்லத்தம்பி செல்லத்துரை
(அல்லைப்பிட்டி)

அல்லைப்பிட்டி 2 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாக கொண்ட செல்லத்தம்பி செல்லத்துரை சிலாபத்தில் 19-5-95 அன்று காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்லத்தம்பி - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவகுரு - நாகம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், வடிவாம்பிகை சாமபவதாஸ் (மோகன் - கலாபம் வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத்தந்தையும், தனபாலசிங்கம் (சாவகச்சேரி), சிவகிருபா (சிலாபம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அருமைநாயகம் (இளைப்பாறிய ஆசிரியர், பரியோவான் கல்லூரி), Dr செல்வநாயகம் (இந்தியா), ஞானம்மா (இளைப்பாறிய ஆசிரியை, கொழும்பு) ஆகியோரின் அன்பு சகோதரரும், தவநிதி, சுதர்சன், கபிலன், ஜனகன், தாட்சாயினி தாரணி, சத்யா ஆகியோரின் அன்புப் பேரனும், செம்பொற்சோதி (கொழும்பு) பரமகுரு, சற்குணலிங்கம், காலஞ்சென்ற மாசிலாமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. மகேஸ்வரி
[மனைவி]

263. நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

(36758)

### மு. பாலசுப்பிரமணியக் குருக்கள் பராசக்தி அம்மா

கெருடாவில் தொட்டிக் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தாவும் பிரதம குருக்களுமாகிய பாலசுப்பிரமணிய குருக்கள் அவர்களின் மனைவி பராசக்தி அம்மா நேற்று (21-5-95) காலை 6 00மணியளவில் சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று 1 00மணியளவில் நல்லூர் ஸ்ரீவீரமாகாளி அம்மன் கோவிலடியில் நடைபெற்று தகனக் கிரியைகள் கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெற்றன.

இத்தகவலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
மு.பாலசுப்பிரமணியகுருக்கள்
பிள்ளைகள், அன்புச்சகோதரி, மருமக்கள்
[36759]

வி. ... (யாழ் ... வெளியீடு) ... யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 22-05-1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

# முஸ்லிம் காங்கிரஸ் யுத்தத்துக்கு ஆதரவு

## சந்திரிகாவுக்கு அஷ்ரப் அறிவிப்பு

கொழும்பு, மே 22

வட - கிழக்கில் அரசு மேற்கொள்ள விரும்பும் யுத்தத்துக்கு முஸ்லிம் காங்கிரஸ் முழு ஆதரவையும் வழங்கும் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு சமாதான தீர்வு காண எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்ததையடுத்து, யுத்தம் மூலம் தீர்வு காண எடுக்கப்படும் நடவடிக்கைக்கு தமது கட்சி முழு ஆதரவையும் வழங்கும் என்று அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சி முறிவடைந்ததையிட்டு கவலை கொள்ள வேண்டாம் என்றும் அவர் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார். [உ-3]

### மாணவர் எழுச்சி நாள் கலந்துரையாடல்

தமிழீழ மாணவர் எழுச்சி நாளை ஒட்டி மாணவர் எழுச்சி நாள் செயற் குழு உறுப்பினர்கள், மாணவர் அமைப்பு பாடசாலை பொறுப்பாசிரியர்கள், மாணவர் பொறுப்பாளர் ஆகியோருக்கான கலந்துரையாடல்களை தமிழீழ மாணவர் அமைப்பு கோட்ட ரீதியில் நடத்தி வருகின்றது

இன்று கோட்டரீதியாக நடைபெறும் கலந்துரையாடல்கள் வருமாறு:-

★ ஊர்காவற்றுறை, வேலணை கோட்டங்கள்:-காலை 9 மணிக்கு யாழ். நாவலர் மண்டபத்தில்.

★ கோப்பாய் கோட்டம்:- காலை 11 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

★ சாவகச்சேரி, பளைக் கோட்டங்கள்:- பிற்பகல் 1. 30 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில். (உ-14)

### வல்லை வெளியில்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வல்லை நெசவு ஆலைக் கட்டடத்துக்குச் சற்றுத் தள்ளி — நாகதம்பிரான் ஆலயத்துக்கு அருகில் பஸ் வந்துகொண்டிருந்த போதே அது ஷெல் தாக்குதலுக்கு இலக்காகியது.

இரண்டு ஷெல்கள் பஸ்ஸின் இருபுறத்திலும், மூன்றாவது ஷெல் பஸ்ஸின் முன்புறத்திலும் விழுந்து வெடித்தன.

முதல் ஷெல்லினால் பஸ்ஸின் ரயர் சேதமுற்றது. பயணிகள் காயமடையவில்லை.

அடுத்த ஷெல் விழுந்து வெடிப்பதற்குள் பயணிகள் பெரும்பாலும் பஸ்ஸை விட்டு இறங்கி ஓடி நிலத்தில் படுத்துவிட்டதால் பெரும் அனர்த்தம் தவிர்க்கப்பட்டது

பருத்தித்துறையைச் சேர்ந்த எஸ் விஜயராஜா [சொக்கன்] என்பவர் பஸ்ஸை விட்டு இறங்கி ஓட முற்பட்ட போது பஸ் படிக்கட்டில் தடுக்கி விழுந்தார் அவருக்கு பின்னால் வந்த பயணிகள் மத்தியில் சிக்குண்டதாலும், இரண்டாவதாக வெடித்துச் சிதறிய ஷெல்லின் சிதறல்களினாலும் பலத்த காயமடைந்தார்.

காயமுற்ற 11 பயணிகளும் பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(உ-9-118-155-173-15)

### படைக்கு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைப் புலிகளுக்கு எதிராக மாபெரும் தாக்குதலை மேற்கொள்ள தயாராகி வருவதாகவும் —

அதற்கு எதுவாக ஆயுதங்களும் இராணுவ தளபதிகளும் ஸ்ரீலங்காவுக்கு வந்து சேரத் தொடங்கியுள்ளதாகவும்

கொழும்புப் பத்திரிகைகளை மேற்கோள்காட்டி சிங்கப்பூர் வானொலி மேலும் தெரிவித்தது (உ-3)

### அரசுக்குள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கம்யூனிஸ்ட் கட்சி சமசமாஜக் கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகள் குழு ஒன்று அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்து தமது நிலைப்பாட்டைத் தெரிவித்ததாகவும் அறிய வந்தது.

பல கட்சிகள் சேர்ந்து அமைத்திருக்கும் பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு நாடாளுமன்றத்தில் ஒரேயொரு பெரும்பான்மை ஆசனம் மட்டுமே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3)

## மெய்வல்லுநர் சட்டவிதி பரீட்சை முடிவுகள் ரத்து!

கொழும்பு, மே 22

மெய்வல்லுநர் சட்ட விதிகளில் தேர்ச்சி பெற்ற அதிகாரிகளைத் தெரிவு செய்வதற்காக ஸ்ரீலங்கா அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் 1993 ஆம் ஆண்டு நடத்திய பரீட்சை ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக இலங்கை வானொலி நேற்றிரவு அறிவித்தது.

இந்தப் பரீட்சைக்கான வினாத்தாள் தெளிவற்ற முறையில் சிக்கலாக அமைந்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்தே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என சங்கப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை—

இப்பரீட்சையை இம்முறை யாழ்ப்பாணத்திலும் நடத்துவதற்கான ஏற்பாட்டை ஸ்ரீலங்கா அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கத்துடன் தொடர்பு கொண்டு யாழ் மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் செய்துவருவதாக மற்றொரு செய்தி தெரிவித்தது. (உ-3)

### ஆஸ்பத்திரி பணிகளுக்கு

## கொழும்பில பயிற்சிபெற தெரிவானோர் விவரம்

எதிர்வரும் ஜூன் 1ஆம் திகதி தொடக்கம் கொழும்பில் ஆரம்பமாகும் தொழில் நுட்பப் பயிற்சி நெறிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரங்கள் கிடைத்துள்ளன. இவர்களுக்குரிய கடிதங்களை உடனடியாகத் தபாலிடமிருந்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ். போதனாவைத்திய சாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

எக்ஸ் கதிர் இயக்குநர்

எஸ். தயாபரன் [நீர்வேலி], மீனலோஜினி [வல்வெட்டித்துறை]. கே. ஜகிரட்ணம் [சாவகச்சேரி], என். ஜெயபாஸ்கர் [கரவெட்டி]

பொது சுகாதார பரிசோதகர்

எஸ். திலீபன் [சுன்னாகம்], பி தயாலந்தன் [யாழ்ப்பாணம்]. கே. ஜெகதீஸ்வரன் [முள்ளியவளை], எஸ். நாகராஜன் (குருக்கள் மடம்).

மருந்துக் கலவை பாளர்

ரி ருக்திரா (யாழ்ப்பாணம்). எம் செல்வக்குமாரன் [சித்தன்கேணி]. ஆர் ஸ்கந்தரூபன் [முள்ளியவளை]. வி. சசிகலா (புலோலி) டீ. கருணாகரன் (கிளிநொச்சி), ஆர். சிறீதரன் (சுன்னாகம்)

ஈ. சி. ஜி. இயக்குநர்

ஏ. ஆர். சக்திதரன் [கொக்குவில்]

ஆர். ராஜ்குமார் (செங்கலடி).

மருந்தாளர்

ஆர். சுரேந்திரன் [யாழ்ப்பாணம்] ஜி சூரியகுமார் [கரவெட்டி] என் மகேந்திரராஜா [அச்சுவேலி], ரி. சிறசேசன் [கோப்பாய்], பி சிறிஸ்கந்தராஜா [யாழ்ப்பாணம்], ரி வசந்தன் (யாழ்ப்பாணம்). கே பரமேஸ்வரன் [சுன்னாகம்], கே. சதீஸ் [பருத்தித்துறை], ஏ ஜெகதீஸ்வரன் [கொக்குவில்]. ஏ கிருஸ்ணவேணி [அச்சுவேலி]. கே வேலந்தன் [சுன்னாகம்]. பி அரவிந்தன் [யாழ்ப்பாணம்]

ஆய்வுகூட தொழில் நுட்ப விஞ்ஞானி

ஆர் ஜசந்திரன் [யாழ்ப்பாணம்], எஸ். சுரேஸ்குமார் [மானிப்பாய்]. எஸ். செல்வச்சந்திரன் [பருத்தித்துறை]. [ஏ]

### விசேடசேவை

யாழ்ப்பாணம், மே. 22

செம்பியன்பற்று புனித பிலிப்நேரியார் தேவாலய வருடாந்த திருநாளை முன்னிட்டு யாழ் பஸ்நிலையத்தில் இருந்தும், பருத்தித்துறையில் இருந்தும் விசேட போக்குவரத்துச் சேவைகள் நடைபெறும்

வியாழன் வெள்ளிக்கிழமைகளில் (25. 26ஆம் திகதிகளில்) பிற்பகல் 3 மணிக்கு இந்த விசேட சேவைகள் நடைபெறும் என்று —

யாழ். மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்கங்களின் இணையம் அறிவித்துள்ளது (அ)

### பொருள்களுடன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாபனத்தினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட இக்கப்பலுக்கு சந்தேகத்துக்கு உரிய விதத்தில் "கல்யாணி". 'றிவர்றன்' என இரு பெயர்கள் சூட்டப்பட்டிருப்பதாகவும் —

சர்வதேச சட்டங்களுக்கு முரணாக — செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுக்கு சொந்தமில்லாத இக்கப்பலின் இரு பக்கங்களிலும் பெரிய அளவிலான இரு செஞ்சிலுவை இலச்சினைகள் ஒட்டப்பட்டிருப்பதாகவும் —

அந்த இலச்சினைகளை ஒட்டியவர்கள் யார்என்பதுதுறைமுக தொழிலாளர்களுக்கு புரியாத புதிராக உள்ளதாகவும் அச்செய்தியில் கூறப்பட்டது.

செஞ்சிலுவை இலச்சினை ஒட்டப்பட்டது சந்தேகத்தை தோற்றுவித்துள்ளதால் அது பற்றி விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளதாக துறைமுக கப்பல்துறை அமைச்சின்மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இக்கப்பலில் வடபகுதிக்கு ஆயுதங்கள் எடுத்துச் செல்லப்பட முயற்சிக்கப்பட்டதா என்பதைக் கண்டுபிடிப்பதற்காக சோதனைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கப்பலுக்கு இரு கப்பல் நிறுவனங்கள் உரிமை கோரியிருப்பது மேலும் சந்தேகத்தை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கப்பலின் உண்மையான உரிமையாளர் யார்? கப்பலுக்கு இரண்டு பெயர்கள் பயன்படுத்தப்படுவது ஏன்? செஞ்சிலுவை இலச்சினைகளை ஒட்டியது யார்? என்ன தேவைக்காக அவை ஒட்டப்பட்டன? — என்பன குறித்து விசாரணைகளைச் செய்ய வேண்டியது கப்பற் கூட்டுத்தாபனத்தினுடைய வேலையே என துறைமுகக் கப்பல் துறை அமைச்சின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார் — இவ்வாறு "திவயின" மேலும் தெரிவித்தது. (உ-10)

### பயணிகள்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஷெல் என்பதை உணர்ந்து, பஸ்ஸை விட்டு ஓடி நாம் குப்புறப்படுக்காமல் விட்டிருந்தால் பலத்த உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கும்." — என்றும் அவர் கூறினார்.

அதே பஸ்ஸில் பயணம் செய்த —பருத்தித்துறையைச் சேர்ந்த — எஸ். பத்மநாதன் என்பவர் இந்தச் சம்பவம் குறித்து தகவல் வெளியிடுகையில் —

"கணிசமான தொகை பயணிகளுடன் பஸ் சென்று கொண்டிருந்த போது திடீரென பலத்த வெடிசத்தம் கேட்டது. பஸ்ஸின் டயர்தான் வெடித்து விட்டது என நினைத்து நாம் இறங்கிப் பார்த்த போது ஷெல்லினால் டயர் வெடித்திருந்ததைக் கண்டோம்" — என்றார்

"நாங்கள் செய்வதறியாது திகைத்து, அல்லோல கல்லோலப்பட்டு பாதுகாப்புத் தேடி நாலாப்புறமும் சிதறி ஓடினோம். அப்போது அடுத்தடுத்து ஷெல்கள் விழுந்து வெடித்தன பஸ் தீப்பற்றி எரிவதைக் கண்டேன்." — இவ்வாறு அவர் மேலும் குறிப்பிட்டார். (உ-9-118-...)

## புத்தளம் மாவட்டத்தில் சோதனை நிலையங்கள்

கொழும்பு, மே 22

புத்தளம் மாவட்டத்தில் பிரதான நகரங்களிலும் சந்திகளிலும் சோதனை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு பொலீஸாரும், இராணுவத்தினரும் சோதனை நடத்தி வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

பாலாவி, கிரியங்கள்ளி, பத்துளு ஓயா, பங்காதெனிய, மாதவெல, வென்னப்புவ போன்ற இடங்களில் சோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இப் பகுதிக்கு புதிதாக வருவோர் பொலீஸ் நிலையங்களுக்குச் சென்று தங்கள் பெயர்களை பதிவு செய்ய வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. (உ-ஐ)

# சமஷ்டிக்கு எதிரான பிரசாரம் ஆரம்பம்

கொழும்பு, மே 22

இனப் பிரச்சினைக்கு சமஷ்டித் தீர்வு வழங்கக் கூடாது என்று கொழும்புப் பத்திரிகைகள் எழுதத் தொடங்கிவிட்டன.

அரசாங்கம் தமிழர்களுக்கு வழங்கவுள்ள சமஷ்டி, தனிநாட்டைத் தட்டில் வைத்துக் கொடுப்பது போலாகும் என்று அரசுக்கு எதிரான பத்திரிகை நேற்றைய இதழில் ஆசிரியர் தலையங்கம் எழுதியுள்ளது.

இப்படியான பிரசாரம் ஆரம்பிக்கப் பட்டுள்ளதால் சமஷ்டித் தீர்வுக்குச் சிங்கள மக்களை இணங்க வைப்பது பெரும் பிரச்சினையாக மாறும் — என்று பி.பி.ஸி செய்தியாளர் கருத்து வெளியிட்டுள்ளார்.

அரசமைப்பின் முதலாவது அத்தியாயம்

இதேவேளை அரச சார்புப் பத்திரிகை ஒன்று அரசின் உத்தேச புதிய அரசமைப்பின் முதலாவது அத்தியாயத்தை நேற்றுப் பிரசுரித்தது.

முதலாவது அத்தியாயத்தில் அடிப்படை உரிமைகள் பற்றிய கருத்துக்களே இடம் பெற்றுள்ளன.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்தல், அதிகாரப் பரவலாக்கல் ஆகியன குறித்த அத்தியாயங்கள் இப்போது தான் தயாரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-3 6)

### விடுதலைப் புலிகளுடன் போரிட

# இராணுவத் தளபதிகள் மட்டத்தில் மாற்றங்கள்!

கொழும்பு, மே, 23

விடுதலைப் புலிகளுக்கு எதிராக போராடுவதற்காக இராணுவத் தளபதிகள் மட்டத்தில் மீண்டும் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போருக்குப் பொறுப்பாக மூன்று வாரங்களுக்கு முன்னர் நியமிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் ஏ. எம்.பி. செனிவிரத்ன அப் பதவியில் இருந்து மாற்றப்பட்டுள்ளார்.

அவரது இடத்துக்கு பிரதி இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் றொஹான் தலுவத்த நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்னர் வடபிராந்திய இராணுவத் தளபதியாக இருந்தவர். இவரது காலத்தில் விடுதலைப் புலிகள் வெற்றிகரத் தாக்குதல்களை நடத்தியதைத் தொடர்ந்து அவர் அந்தப் பதவியிலிருந்து மாற்றப்பட்டார் இப்போது அவரே மீண்டும் போருக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இவற்றைவிட இராணுவப் பதவிகளில் மேலும் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. (அவை பற்றிய விவரங்கள் 3 ஆம் பக்கத்தில்).

[அ-3]

### 2 படையினர் காயம்

கொழும்பு, மே 22

புல்மோட்டை பகுதியில் நேற்று முன்தினம் இரவு 11 30 மணியளவில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் படையினர் இருவர் காயமடைந்தனர் என்று அறிவிக்கப்பட்டது. (உ-ஐ)

### மலையகப்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டி சில்வா தெரிவித்துள்ளாராம்.

ஊவா மாகாணத்தில் அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இல்லாததால் - பொலீசாரால் மேற்கொள்ளப்படும் தேடுதல் வேட்டைகளின்போது கைது செய்யப்படும் சந்தேக நபர்களை விசாரிப்பதில் சில தடைகள் ஏற்பட்டுள்ளதாகவும் பிரதிப் பொலீஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

மலையகத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் தோன்றியுள்ளதாக ஊவா மாகாண ஆளுநர் ஆனந்த தசநாயக்கா நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தைக்கும் அண்மையில் தெரிவித்திருந்தார்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தாக்குதல் பிரிவைச் சேர்ந்த — சிவா நியூட்டன் தலைமையிலான — குண்டுகளை வெடிக்கவைக்கும் குழு மலையகத்திற்கு வந்திருப்பதாக பதுளைப் பொலீஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளன.

மொனறாகலை மாவட்டத்திலுள்ள சியம்பலாண்டுவப் பிரதேசத்தில் பல இடங்களிலும், பசறைப் பகுதியிலும் புலிகளின் செயற்பாடுகள் குறித்து தகவல்கள் கிடைத்துள்ளதாகவும்—

உல்லாசப் பயணத்துறைக்கும், ஸ்ரீலங்காவின் முக்கிய ஏற்றுமதியான தேயிலை உற்பத்திக்கும் பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்துவதே புலிகளின் நோக்கமெனவும் —

பாதுகாப்பு வட்டாரச் செய்திகள் தெரிவிப்பதாக "லங்காதீப" மேலும் குறிப்பிட்டது. (உ-10)

### இன்று விடுமுறை

கொழும்பு, மே 22

தேசிய வீரர் தினத்தை ஒட்டி இன்று அரச, வங்கி விடுமுறை என்றும் —

வர்த்தக விடுமுறை அல்ல என்றும் தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது

(உ-3)

### படையினரிடம் சிக்கினார்

யாழ்ப்பாணம், மே 22

நேற்றுக் காலை 11 மணியளவில் வயாவிளான் குட்டியபுலம் பகுதியில் புல் வெட்டிக் கொண்டிருந்த நல்லதம்பி (வயது 65) என்ற வயோதிபர் அப்பகுதிக்கு வந்த படையினரால் கூட்டிச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(உ-9)

### சந்திரிகா இன்று மக்களுக்கு உரை

கொழும்பு.மே 22

ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்று வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களுக்கு உரையாற்ற விருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

அரசாங்கத்தின் முக்கிய தீர்மானங்கள் குறித்து இவ்வுரையில் அவர் விளக்குவார் என எதிர்பார்க்கப்படுகின்றது

(உ 3)

### தேசிய விருது வழங்குவது ஒத்திவைப்பு

கொழும்பு, மே 22

தேசிய வீரர் தினத்தையொட்டி தேசிய விருதுகள் வழங்க இன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுடன் யுத்தம் நடப்பதால் இந்த நிகழ்ச்சி ஒத்திவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

### நினைவு நாள்

முன்னாள் கலவான நாடாளுமன்ற உறுப்பினர் சரத் முத்தெட்டுவேகம மறைவின் 9 ஆவது நினைவுதினம் இன்று 22ஆம் திகதி இரத்தினபுரியில் அனுஷ்டிக்கப்படுகிறது. (ஏ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org